# 5 ஜி பயன்பாட்டுக்கு 'கேஸ் லேப்' திருச்சி என்ஐடி தேர்வு

**திருச்சி, அக். 28–**

இந்திய தொலை தொடர்பு துறை வழங்கவுள்ள 5 ஜி பயன்பாட்டு கேஸ் லேப் பராமரிப்புக்காக இந்தியாவில் 100 நிறுவனங்களை தேர்வு செய்துள்ளது.

இதில் திருச்சி என்ஐடியும் ஒன்றாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து என்ஐடி இணை பேராசிரியர் கோபி கூறியது: மத்திய தொலை தொடர்பு துறை வழங்கும் 5 ஜி பயன்பாட்டு கேஸ் லேப் பராமரிப்பிற்காக திருச்சி என்ஐடி தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு அமைப்பிற்கும் மத்திய தொலை தொடர்புத் துறைரூ. 80 லட்சம் வழங்குகிறது. இதன் மூலம் விவசாயம், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு உதவிகரமாக இருக்கும். இதனை பயன்படுத்தி எதிர்காலத்தில் 6 ஜி வசதியை பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும், என்றார்.

என்ஐடி இயக்குனர் அகிலா, டீன் சங்கரநாராயணன், துறை தலைவர் பழனிசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.